Name of the Newspaper: DINA MALAR Date: 2-1-18

# மெட்ரோ ரயில் நிலையங்களில் வாடகை சைக்கிள் அறிமுகம்




அண்ணாநகர்.



நேரு பார்க்.

–நமது நிருபர்–

திருமங்கலம் மெட்ரோ ரயில் நிலையம் உட்பட, மூன்று நிலையங்களில், பயணியருக்கு வாடகை சைக்கிள், அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

சென்னையில், விமான நிலையம் மற்றும் பரங்கி மலையில் இருந்து, நேரு பூங்கா வரையும், விமான நிலையத்தில் இருந்து, சின்னமலை வரையும், மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.

## பயணியர் வருகை

இந்த ரயிலில், பயணியர் வருகையை அதிகரிக்க, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதையொட்டி, மெட்ரோ ரயில்களில் வரும் பயணியர், வெளியிடங்களுக்கு சென்று, மீண்டும் நிலையம் வந்து, ரயிலில் பயணம் செய்ய ஏதுவாக, வாடகை சைக்கிள் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

ஈக்காடுதாங்கல், வடபழனி, திருமங்கலம், அண்ணாநகர் டவர், அண்ணாநகர் கிழக்கு, ஷெனாய் நகர், பச்சையப்பன் கல்லுாரி, கீழ்பாக்கம் மற்றும் நேரு பூங்கா நிலையங்களில், சைக்கிள் வசதி செய்யப்பட்டுள்ளது.

இந்த சைக்கிளுக்கு, முன்பணம், 3,000 ரூபாய் செலுத்த வேண்டும். சைக்கிளை எடுத்து செல்பவர், 24 மணி நேரத்தில், மீண்டும் ஒப்படைக்க வேண்டும்; வாடகை கிடையாது. சைக்கிள் ஒப்படைக்கப் பட்டதும், முன் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

## கோரிக்கை

'முன் பணம் இல்லாமல், சைக்கிள் வழங்க வேண்டும்; வாடகை வசூலித்தாலும் கொடுக்க தயார்' என, பயணியர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையொட்டி, திருமங்கலம், அண்ணாநகர் டவர் மற்றும் அண்ணாநகர் கிழக்கு நிலையங்களில், மெட்ரோ ரயில் நிறுவனம், தனியார் நிறுவனத்துடன் இணைந்து, பயணியருக்கு வாடகை சைக்கிள் அறிமுகம் செய்யப் பட்டுள்ளது.

இவ்வசதியில், பயணியர் சைக்கிளுக்கு, 30 நிமிடங்களுக்கு, ஒரு ரூபாய் கட்டணம் செலுத்த வேண்டும்.

எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொண்டு, அதற்குரிய கட்டணம் செலுத்தலாம். சைக்கிள் எடுக்கும் நேரமும், வரும் நேரமும், தானியங்கி கருவியால் கணக்கிடப்பட்டு, அதற்குரிய கட்டணம் வசூலிக்கப் படுகிறது.

சைக்கிள் வசதி குறித்து, மெட்ரோ ரயில் அதிகாரி கூறும்போது, 'தற்போது, 10 நிலையங்களில் சைக்கிள் வசதி செய்யப் பட்டுள்ளது. மீதமுள்ள நிலையங்களிலும், சைக்கிள் வசதி செய்ய ஏற்பாடு நடந்து வருகிறது' என்றார்.